**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.**

முன்னிலை: திரு.கோ. விஜயகுமார், பி.எஸ்.சி..,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்.
எழுமாத்தூர்

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் நாள் செவ்வாய்கிழமை
(திருவள்ளுவர் ஆண்டு 20576, விசுவாவசு வருடம் மாசி மாதம் 26 ம் நாள் )

**அசல் வழக்கு எண். 228/2024**

**CNR.No. TNED23-001091-2024**

1. சாமியாத்தாள் க/பெ. லேட் பொன்னுச்சாமிகவுண்டர்,
பாரப்பாளையம் காகம் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.
2. சித்ராதேவி க/பெ. ஈஸ்வரமூர்த்தி,
1/54, அமராவதிபாளையம், ராசத்தாவலசு
காங்கயம் தாலூாக்கா, திருப்பூர்மாவட்டம். ... வாதிகள்

// எதிர் //

1. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
ஈரோடு மாவட்டம், ஈரோடு.
2. வருவாய் வட்டாட்சியர் அவர்கள்,
மொடக்குறிச்சி வட்டம், ஈரோடு மாவட்டம்.
3. கிராம நிர்வாக அலுவலர் அவர்கள்,
காகம் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.
4. பஞ்சாயத்து தலைவர், காகம் ஊராட்சி
காகம் கிராமம், மொடக்குறிச்சி வட்டம். ...பிரதிவாதிகள்

தவா சொத்தில் வாதிகளின் பாத்திய சுவாதீனத்தில் உள்ள வீட்டுக்கட்டிடத்தை இடித்தோ, அத்துக்களை அழித்து சட்டவிரோதமாக நுழைந்து ஆக்கிரிமிப்பு செய்தோ அல்லது வேறு எந்த வகையிலுமோ தாவா சொத்துக்குள் வந்து வாதிகளின் பாத்திய சுவாதீன அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என்று தடை செய்து ஒரு நிலைக்கால உறுத்துக்கட்டளை வேண்டியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | : | 19.06.2023 |
| வழக்கு மூலம் | : | 11.05.2023, 16.05.2023, 05.06.2023 ஆகிய தேதிகளில் ஏற்படுத்தப்பட்டு காகம் கிராமம், மொடக்குறிச்சி வட்டம் நீதிமன்ற வரம்புக்குள் உள்ளது. |
| வழக்கு மதிப்பு | : | தாவா மதிப்பு ரூ.1000/- தமிழ்நாடு நீதிமன்றக் கட்டண பிரிவு 27(c) ன்படி ரூ.30/- செலுத்தப் பட்டுள்ளது. |

இவ்வழக்கு ஈரோடு, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.243/2023 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்த நிலையில் மாண்புமிகு ஈரோடு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்ற உத்தரவு எண்.437/2024, நாள்.21.08.2024ன் படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் 06.09.2024ம் தேதி அ.வ.எண்.228/2024 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தின் முன்பாக 10.03.2026 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 1,2 வாதிகள் தரப்பில் திரு.B. பூபதி, வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 வரையான பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினரான நாள் 27.06.2024, வாதி ஆஜரின்மையாலும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, வழக்கு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்பாணை</u>

1. வாதியின் தவறுகையால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.
2. செலவுத் தொகை பொறுத்து உத்தரவு எதுவும் இல்லை.

## <u>சொத்து விபரம்</u>

ஈரோடு பதிவு மாவட்டம், சிவகிரி சார்பதிவு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், காகம் கிராமம், பாரப்பாளையம் நத்தம் சர்வே எண். 163/2 (பழைய க.ச. 344) இதில்

| | | | |
|---|---|---|---|
| சென்னியப்பகவுண்டர் வீட்டுக்கும் | .. | .. | தெற்கு, |
| தென்வடல் தடத்துக்கும் | .. | .. | மேற்கு, |
| கிழமேல் தடத்துக்கும் | .. | .. | வடக்கு, |
| பொன்னுசாமி, சாமியப்பன் பாக இடங்களுக்கு | | .. | கிழக்கு |

இதன் மத்தியில் கிழமேல் இருபுறமும் சுமார் 33 அடிகளும், தென்வடல் இருபுறமும் சுமார் 45 அடிகளும் கொண்ட சமார் 1385 சதுரடி வீட்டிடமும் இதில் கிழக்கு பார்த்த நடையுடன் கூடிய வடக்கு பார்த்த வில்லை வீடுகளும், மேல்புறம் வடபுறம் கட்டப்பட்டுள்ள கழிவறை, குளியலறை கட்டிடங்களும் இதை சார்ந்த முன்பின் வாசல் கதவு நிலவு கட்டுக்கோப்பு அடிநிலமும், மாமூல் தடபாத்தியங்களும் சகிதம், கதவு எண். புதியது 10 (பழைய எண்.11) வீட்டு மின்இணைப்பு எண்.04–033–006–330 மற்றும் குடிநீர் இணைப்பு சகிதம்.

இன்று 2026ம் வருடம் மார்ச் மாதம் 10ம் நாள் என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு வழங்கப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.

**<u>Decree</u>**

O.S.No.228/2024

dated 10.03.2026.

DM cum JM Court,
Elumathur

<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.</u>

<u>அசல் வழக்கு எண்.228/2024</u>

1. சாமியாத்தாள்
2. சித்ராதேவி ... வாதிகள்

// எதிர் //

1. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
ஈரோடு மாவட்டம், ஈரோடு.
2. வருவாய் வட்டாட்சியர் அவர்கள்,
மொடக்குறிச்சி வட்டம், ஈரோடு மாவட்டம்.
3. கிராம நிர்வாக அலுவலர் அவர்கள்,
காகம் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.
4. பஞ்சாயத்து தலைவர், காகம் ஊராட்சி
காகம் கிராமம், மொடக்குறிச்சி வட்டம். ...பிரதிவாதிகள்

<u>தாவா மதிப்பு வரைவு</u>

| | | |
|---|---|---|
| 1. தாவாவின் தன்மை | : | நிலைக்கால உறுத்துக்கட்டளைக்காக |
| 2. தாவா மதிப்பு | : | ரூ.1,000/- |
| 3. நீதிமன்ற கட்டணம் | : | ரூ.30/- |
| 4. சட்டமும், பிரிவும் | : | தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம்பிரிவு 27(c) ன்படி |

ஒம்/- XXX
வாதி வழக்கறிஞர்

ஒம்/- XXX
வாதி.

//உண்மை நகல்//

/உத்தரவுப்படி/

ஒப்பம்/-தலைமை எழுத்தர்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர்